**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆடி மாதம் 20 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் நாள் புதன்கிழமை

**நிறைவேற்று மனு எண். 1/2026**

**அசல் வழக்கு எண். 62/2019**

M. நாகம்மாள் ... **மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர்**

**//எதிர்//**

1. D. இந்திராணி

2. S. D. சிவசங்கர்

3. கற்பகம்

4. நவமணி தேவி ... **எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 1 , 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மகேந்திரன், அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் வகுமுறை 21 விதி 34ன் கீழ் சொத்து விபரத்தில் உள்ள சொத்தில் மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2

முதல் 4 எதிர்மனுதாரர்களின் தந்தையான S.K.தனகோபால் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தத்தினை இரத்து செய்து கிரைய ஒப்பந்த இரத்து பத்திரம் பதிவு செய்து தர வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தந்தையான S.K.தனகோபால் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட 08.08.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தினை அசல் வழக்கு எண்.62/2019 ல் ஏற்பட்ட தீர்ப்பின் படி இரத்து செய்து கிரைய ஒப்பந்த இரத்து பத்திரத்தை எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் பதிவு செய்து தர வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவினை, மனுசொத்தை பொறுத்து 08.08.2014 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தினை ரத்து செய்து கொடுக்க கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

2.2). அசல் வழக்கு எண்.62/2019 ல் ஏற்பட்ட தீர்ப்பினை எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மேல் முறையீட்டு மனுவினை 3ம் எதிர்மனுதாரர் (A.S.No.90/2024) மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார். அந்த மேல் முறையீட்டு மனுவும் 27.01.2025 ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது. இந்த மேல்முறையீட்டு மனுவிற்கு மேல் எதிர்மனுதாரர்கள் 2ம் மேல் முறையீடு ஏதும் செய்யவில்லை. எனவே மனுதாரர், தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரங்கள் வழங்க 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் சம்மதிக்கிறார்கள்.

**3). தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5). நிறைவேற்று மனு மற்றும் இரு தரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு கேட்கப்பட்டது. நிறைவேற்று மனு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு 08.08.2014 தேதியிட்ட மனுதாரர் மற்றும் S.K.தனகோபால் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தப் பத்திரத்தை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.1). அசல் வழக்கு எண்.62/2019 ஆனது 06.07.2023 அன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 06.07.2023 தேதியிட்ட தீர்ப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "*பிரதிவாதிகள் 08.08.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து 2 மாதக் காலத்திற்குள் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை*"

5.2). தீர்ப்பிற்குப் பிறகு, மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர், 06.07.2023 தேதியிட்ட தீர்ப்பின்படி மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தந்தையான S.K.தனகோபால் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தத்தினை இரத்து செய்து கிரைய ஒப்பந்த இரத்து பத்திரம் பதிவு செய்து தர வேண்டி இந்த நிறைவேற்று மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எண்.62/2019 ஆனது 2019 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு, 06.07.2023 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் தீர்ப்பின் பலன்களைப் பெறவில்லை. எனவே, அசல் வழக்கு எண்.62/2019 வழக்கில் வழங்கப்பட்ட

தீர்ப்பின்படி, மனுதாரர்/தீர்ப்பு பெற்றவருக்கு எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் 08.08.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுப்பது அவசியமாகிறது.

5.3). நிறைவேற்று மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரங்கள் வழங்க 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் சம்மதிக்கிறார்கள் என 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக 06.07.2023 தேதியிட்ட அசல் வழக்கு எண்.62/2019 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் மூலம் 08.08.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து 2 மாதக் காலத்திற்குள் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தை நிறைவேற்ற வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

5.4). ம.சா.ஆ.3 மற்றும் 4 ஆக 27.01.2025 தேதியிட்ட அசல் வழக்கு எண்.62/2019 ன் மேல்முறையீட்டு எண்.90/2024 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு எண்.62/2019 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.90/2024 ஆனது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே, நீதியின் நலன் கருதி அசல் வழக்கு எண்.62/2019 ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் படி 08.08.2014 தேதியிட்ட S.K.தனகோபால் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தத்தினை இரத்து செய்து கிரைய ஒப்பந்த இரத்து பத்திரம் பதிவு செய்து தர வேண்டி தாக்கல் செய்த இந்த நிறைவேற்று மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக நிறைவேற்று மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SANTHOSHAM M Digitally signed by SANTHOSHAM M 19:30:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-</u>** - இல்லை.

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.07.2023 | அசல் வழக்கு எண்.62/2019 ன் தீர்ப்புரை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | 06.07.2023 | அசல் வழக்கு எண்.62/2019 ன் தீர்ப்பாணை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | 27.01.2025 | மேல்முறையீடு எண்.90/2024 ன் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 27.01.2025 | மேல்முறையீடு எண்.90/2024 ன் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

SANTHOSHAM M Digitally signed by SANTHOSHAM M 19:30:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Draft/ Fair Order
EP.No. 1/2026
OS.No. 62/2019
Dated : 05.08.2026
DMC, Sulur.